விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மாசி 24 ஜ- ஆகி 14 இதழ் 25
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7-3-1985

## இந்திய மாநில தேர்தல் முடிவுகள்!

| | மொ.இடம் | வெளியான முடிவு | இ.காங். | பாரதீய ஜனதா | ஜனதா | தெலுங்கு தேசம் | இதர கட்சி |
|---|---|---|---|---|---|---|---|
| மத்தியப் பிரதேசம் | 320 | 320 | 250 | 58 | 05 | | 07 |
| உத்தரப் பிரதேசம் | 425 | 219 | 143 | 02 | 08 | | 00 |
| பீகார் | 324 | 121 | 80 | 09 | 06 | | 26 |
| மகாராஷ்ரம் | 288 | 278 | 215 | 58 | 05 | | 00 |
| கர்நாடகம் | 224 | 220 | 62 | 02 | 139 | | 17 |
| ஆந்திரா | 294 | 206 | 33 | 0 | 1 | 150 | 22 |
| இமாலய பிரதேசம் | 68 | 40 | 35 | 4 | | | 1 |
| ஒரிசா | 147 | 145 | 117 | 19 | | | |
| ராஜஸ்தான் | 198 | 175 | 102 | 10 | 21 | | 42 |
| சிக்கிம் | 32 | 29 | 1 | — | — | | 28 |
| குஜாராத் | 182 | 164 | 133 | 10 | 14 | | 07 |
| புதுச்சேரி | 30 | 30 | 15 | அ.தி,மு,க. 6 | தி. மு. க. 5 | ஜனதா 2, | 2 |

# வடமாநிலங்களில் இ. காங்கிரஸ் அமோக வெற்றி!

## ஆந்திராவில் ராமராவ், கர்நாடகத்தில் ஹெக்டே

(புதுடில்லி)

இந்தியாவின் பத்துமாநிலங்களில் நடைபெற்ற சட்டசபைத்தேர்தலில் ஆந்திரா, கர்நாடக, சிக்கிம் மாநிலங்களைத்தவிர்ந்த ஏனைய சகல மாநிலங்களிலும் இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றியீட்டியுள்ளது.

நேற்று நள்ளிரவுவரை மத்தியப்பிரதேசம், புதுச்சேரி முடிவுகள்மட்டுமே முழுவதும் வெளியாகியிருந்தது. இந்த இரண்டு இடங்களிலும் இ. காங்கிரஸ் அறுதிப்பெரும்பான்மை பலத்தை பெற்றிருந்தது.

ஏனைய வடபகுதி மாநிலங்களில் இ. காங்கிரஸ் அதிக இடங்களைப்பெற்று முன்னணியிலுள்ளது.

ஆந்திரா, கர்நாடகம், சிக்கிம் ஆகிய மாநிலங்களில் மட்டுமே இந்திராகாங்கிரஸ் தோல்விஅடைந்தது. ஆந்திராவில் திரு. என். ரி. ராமராவ்தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சியும், கர்நாடகத்தில் திரு ராமகிருஷ்ண ஹெக்டே தலைமையிலான ஜனதா கட்சியும் வெற்றிபெற்று முன்னணியிலுள்ளன.

# வடமராட்சி ராணுவ முற்றுகை

# 7 பேர் பலி, பலர் கைதாகினர்!

## அதிகாலை முதல் மாலை வரை

### தீவிர தேடுதல்; வாகனங்கள் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியிலுள்ள பெரும்பாலான கிராமங்களை சுற்றிவளைத்த ஆயுதப்படையினர் நேற்று அதிகாலை 2 மணி முதல் மாலை 4 மணி வரை தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இத்தேடுதல் வேட்டையின்போது 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் 12 பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் ஆயுதப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(6ம் பக்கம் பார்க்க)

## துர்க்கை அம்மன் ஆலயக் கொள்ளை கொள்ளையர்களை கண்டுபிடிக்க பக்தர்கள் தீவிர முயற்சி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட கோஷ்டியினர் தேவியின் அருளால் விரைவில் -ரணடைந்துவிடுவர் அல்லது கண்டுபிடிக்கப்படுவர் என்று தேவியின் பக்தர் ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தேவியின் ஆலயத்தில் கொள்ளையடித்தவர்களைக் கண்டு பிடிப்பதில் ஆலயத் தொண்டர் குழுக்களும், நாடெங்கும் செறிந்திருக்கும் பக்தர் கூட்டமும் தீவிரதேடுதல் முயற்சியில் ஈடுபட்டுள்ள

[6ம் பக்கம் பார்க்க]

## பருத்தித்துறைக்கு நேற்று போக்குவரத்து இல்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் பருத்தித்துறைக்குமிடையே நடைபெறும் சகலபோக்குவரத்துச் சேவைகளும் நேற்று நடைபெறவில்லை.

யாழ்ப்பாண டிப்போவிலிருந்து பருத்தித்துறை செல்லும் 750, பஸ்கள் அச்சுவேலியுடனும், 751 பஸ்கள் வல்வெட்டித்துறை வரையுமே சேவையாற்றின.

பருத்தித்துறை டிப்போபஸ்கள் எதுவும்சேவை யிலீடுபடவில்லை.

தனியார் பஸ்களோ மற்றும் வாகனங்களோ பொது

(6-ம் பக்கம் பார்க்க)

## தொண்டமானின் இந்தியப்பயணம் தனிப்பட்டதே!

(கொழும்பு)

கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டே இந்தியா செல்லுகின்ருர் என்றும் அவரிடம் ஜனதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தி எந்த

(6-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு பிரயாணம்

(பேர்லீன்)

### கொழும்பு—பேர்லீன் சேவைகள்

உங்களின் உடனடியான பேர்லீன் பயணத்தைப் பாங்கொக் (BANGHOK) ஊடாக AEROFLOT சேவையில் ஒழுங்கு செய்துள்ளோம் என்பதை இத்துடன் மனகிழ்ச்சியுடன் அறியத்தருகின்ருேம்.

கட்டணம்:- ரூபா 15,500/-

புறப்படும் நாள் AIR LANKA + AEROAFLOT
திங்கள் கொழும்பு—பாங்கொக்—மொஸ்கோ—பேர்லீன்

நேரம்: 10-30 6-00 P. M.
நேரம் (டிக்கட்டில் கூறப்படும்)

இவ்வொழுங்குகளை இம்மாதம் 11-ம் திகதி தொடக்கம் வரும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் எமது சேவையை நடைமுறையில் ஈடுபடுத்த உள்ளோம்.

விபரங்கட்கு:

முகாமையாளர்

கிறீன் பீல்ட் ட்ரவல்ஸ் ஒப்பறேட்டர்ஸ்

Greenfield Travels Operators

26, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22784

(2145)

## குருநகரிலிருந்து 29 குடும்பங்கள் வெளியேறிவிட்டன!

### தீவுப்பகுதியில் அகதிகளாயினர்

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியிலிருந்து இதுவரை 29 குடும்பங்கள் வெளியேறிவிட்டன.

இவர்களின் வீடுகள் இடிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

குருநகரிலிருந்து வெளியேறியவர்களில் பலர் சாட்டி மாதா கோவில் வேலணை, அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் அகதி

[6ம் பக்கம் பார்க்க]

## மக்கள் வெளியேறிய 29 வீடுகள் உடைக்கப்பட்டு வருகின்றன!

### பிரிகேடியர் — பிரஜைகள் குழு சந்திப்பில் தகவல்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியிலிருந்து தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறும் குடும்பங்களுக்கு, 'யாழ். நகரில் நிரந்தரமாக வாழ்ந்து வந்த இவர்கள் அரசின் நடவடிக்கையால் வெளியேற்றப் படுகிருர்கள்' என்று கடிதம் வழங்கவேண்டுமென்று நேற்று யாழ். பிரஜைகள் குழுவினர் யாழ். இணைப்பு அதிகாரி பிரிகேடியர் வணதுங்காவைச் சந்தித்தபோது கோரிக்கை விடுத்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

# அசி ளம்பரம்

## விற்பனைக்கு

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினால் கல் அரித்து தயாரிக்கப்படுபவை ...ர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

50% முளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2116

பிலிமத்ரொக், ஒஸ்ரொலொப், ஆர். ஐ ஆர்., சசெக்ஸ் இன கோழிக்குஞ்சுகள் 7-ந் திகதி வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 2132

பல்வேறு கவர்ச்சிகர நிறங்களில் அழகானதும், நீடித்துப் பாவிக்கக் கூடியதுமான கண்ணுடிஇழையாலான குசினி பேசின் (Sink), Drain Board உடன் விற்பனைக்குண்டு. விலை 750/- ரூபா மட்டுமே ட்ரேட் சென்ரர், ஹோம் பினன்ஸ் லிமிட்டட், 155 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1484

## தேவை

பிரபல சைவ ஹோட்டல் ஒன்றிற்கு சமையல், இடியப்பம் தோசை, ரீமேக்கர், சப்ளை, செய்வதற்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் உடன்தேவை தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும். அம்பலவாணர் அன் சன்ஸ், 196, சே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 2105

## வாடகைக்கு

பலாலி வீதியில் சகல வசதிகளுடனும் நாலு படுக்கை அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு, தொடர்பு 275 (புதியஇலக்கம்) பலாலி வீதி, கந்தர்மடம். 2144

## கல்வி

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி 1985 க் குரிய வகுப்பு ஆரம்பித்து விட்டது. இன்னும் சிலர் சேர இடமுண்டு. ஜி. ஸி. ஈ. சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். குடாநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலுள்ளோர் தபால் வழியும் கற்கலாம். விபரங்களுக்கு பாலர் ஆசிரியர் சங்கம், 610 (418) சே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2138

# ஓர் அறிவித்தல்

வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள், வியாபாரிகள் அனைவருக்கும்

**தோலகட்டி நெல்லி ரசம் – முந்திரிகை ரசம் பற்றிய முக்கிய அறிவித்தல்**

எமது தயாரிப்புகள் போன்று எமது லேபல்களை ஒத்த போலி லேபல்களில் நெல்லி ரசம், முந்திரிகை ரசம் யாழ்நகரில் விற்பனையாவது எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு நாம் முன்பு அறிவித்தல் கொடுத்திருந்தோம். ஆனாலும் சில பிரபல யாழ். நகர் வர்த்தகர்கள் போலி நெல்லிரசம், முந்திரிகை ரசம் இன்றும் விற்பது எமது மனத்தை மிகவும் வேதனைக்குள்ளாக்குகின்றது. அத்துடன் மட்டுமல்லாமல் எமது பெயரைப் பயன்படுத்தி நெல்லி ரசம், முந்திரிகை ரசம் போன்றவற்றை விற்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். போலிகள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் இரசாயன சேர்வைகள் கொண்டு தயாரிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் இவற்றை தடைசெய்வதற்கும், எமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கும் எமது முகவர்களாக —ஜோ. எகட்டன் செனித் மார்க்கட்டிங், யாழ்நகர் என்பவரை நியமித்துள்ளோம். உங்கள் தேவைகளுக்கு வாரம் தோறும் அவர்கள் உங்களைச் சந்திப்பார்கள். தோலகட்டி தயாரிப்புக்களை கவனித்து வாங்கவும். எமது அசல் லேபல்களில் கோயில் தூண் வலப்பக்கமும், போலிகளில் இடப் பக்கமும் இருக்கும்.

நெல்லி ரசம் 22/50 சதம்
முந்திரிகை ரசம் 24/50 சதம்

இலங்கை முழுவதும் ஏஜன்ட்:
**ஜோ—எகட்டன்**
செனித் மார்க்கட்டிங், யாழ்நகர்.

யாழ்நகரில் ஏக கையிருப்பாளர்கள்:
**வரணி மிஷன் பாம்**
(விற்பனை நிலையம்)
145, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

செபமாலை தாசர் சபை
தோலகட்டி,
வசாவிளான்.
2139.

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

இலக்கம் 6, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மருதப்பு நடராஜா என்பவரின் மரண சாதனத்தின் மரணச்சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்

வழ. இல; ரி/3852
மருதப்பு நடராஜா
கைம்பெண் கனகேஸ்வரி,
இல: 6, இரண்டாம் ஒழுங்கை.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
—மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடடபட்டது மான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30-ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளைபதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30-ம் திகதி.
நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
2110

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

அராலி தெற்கு, வட்டுக் கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா ரஞ்சன் என்பவரது மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்

வழ இல: ரி / 3857
வி. கனகசபை கந்தையா,
அன்பு இல்லம்,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
—மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ந் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1985-ம் ஆண்டு மாசிமாதம் 15-ம் திகதி.
மன்றின் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
2111

# A/L 85
## Day Class

நடைபெறுகின்றது
(திங்கள் முதல் வெள்ளி வரை)
10-30: நீர்நிலையியல்
12-00: அட்சரகணிதம்
(1½ மணித்தியாலவகுப்பு)

ஆசிரியர்:
RAVIMOHAN
JAFFNA.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்) 2140

## மாவட்டசபை தேர்தல்கள் ஒத்திவைப்பு!

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதம் நடத்தப்படவிருந்த மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல்கள்யாவும் ஒருவருடகாலத்துக்கு பின்போடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் தெரிவித்தார்.

ஜனநாயக நிருவாக அமைப்பை பரவலாக்குதல் சம்பந்தமான சிலயோசனைகளை ஜனாதிபதி தலைமையிலான உபகுழு ஆராய்ந்து வருவதின் நிமித்தமே இந்தமுடிவு எடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார் (ரா)

# மலிவு விற்பனை
# 20% குறைப்பு

★ அலுமினியம் ★ எவர்சில்வர்
பாத்திரங்கள் 20% கழிவுடன் விற்பனையாகிறது.
உங்கள் தேவைக்கு
**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**
257, காங்கேன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
2136

# சிக்மா பம்ப்ஸ்

## விற்பனை நிலைய இடமாற்ற அறிவித்தல்

ஒட்டோஸ் கட்டிடம், 190, ஆஸ்பத்திரி வீதியில் இருந்த எமது விற்பனை நிலயம் 274/1, ஆஸ்பத்திரி வீதிக்கு (பெரியாஸ்பத்திரிக்கு முன்னல்) மாற்றபபட்டுள்ளது என்பதை அறிவித்துக்கொள்ளுகின்றேம்.

**நீர் இறைக்கும் இயந்திர பாவனையில் முன்னணி வகிப்பது**

# சிக்மா பம்ப்ஸ்

**யுனைரெட் அக்ரோ என்ஜினியரிங்**
அலுவலகம்:
274/1, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22747
தொழிற்சாலை: நாவற்குழி, கைதடி.
(2146)

# ஓராண்டு நினைவஞ்சலி

**டாக்டர் விசாகேசன் சச்சிதானந்தன்**

தோற்றம்: 7-10 37 மறைவு: 7-3-84



என்னருமை மகனே!
உன் மடியில் நான்
சாயக் காத்திருப்பேன்
என்று நானுரைக்க;
ஓராண்டில் நாங்கள்
உறுதியாய்த்
திரும்புவோம்
என்று நீசொல்லிப்போய்;
நாங்கள் சந்தோஷமாக
இருக்கிறேம் என்று
நீயெழுதி,
ஈரைந்து வாரங்கள்
முடியுமுன்
காலன் சடுதியாய்
அணுகுவதை நீ கண்டு;
உடனே தாய்நாடு திரும்ப
வேண்டும் என்று
நீ சொல்ல,

உன்னருமை மனைவியும் அண்ணனும் மைத்துனரும்
அன்பாக உனையணைத்து நெடுந்தூரம் பறந்து வந்து,
இங்கு நாமெல்லோரும் கண்ணீர் சொரிய
உன்னைத் தழுவி முத்தமிட, நீ எல்லோருடன்
சிரித்துக் கைகுலுக்கி நலம்கேட்டு,
என்ன பயம் நன் "ஓகே ஓகே ஓகே"
என்று சொல்லிச் சொல்லி நொடிப்பொழுதில்
இறைவனடி சேர்ந்தாயே,

வேதனையுறும் மனைவி, தாய், சகோதரர்,
உற்ருர், உறவினர்.
சண்டிலிப்பாய் வடக்கு. 2068

### மணிவாக்கு

ஒரு கோரமான துன்பம் நிறைந்த அழிவு உன் மனதை அச்சுறுத்தும்போது, ஒரு மகத்தான சிருஷ்டியும் நிச்சயமாக வரவிருக்கிறதென அதற்கு ஆறுதல் கொள்.

— அரவிந்தர்

# மன்னார் மாவட்டத்தில்——

# பதினொரு கிராம மக்கள் வீடுகளிலிருந்து வெளியேறினர்!

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்திலுள்ள சுமார் பதினொரு கிராமங்களிலுள்ள மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிவிட்டனர்.

வங்காலை, பேசாலை, பனங்கட்டிக்கொட்டில் தாழ்வுபாடு அடம்பன், வட்டக்கண்டல், உயிலங்குளம், முருங்கன், விடத்தல்தீவு. வெள்ளாங்குளம் இலுப்பைக்கடவை ஆகிய இடங்களில் பரம்பரையாக வசித்து வந்த மக்களே இப்படி வெளியேறியவர்கள்.

மன்னார் பகுதியில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளையிட்டு பீதியடைந்திருந்த மக்களே தங்கள் சொத்துக்களைத் திறந்து வேறிடங்களை நாடிச்சென்றதாகக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களில் நூற்றுக்கு 95 விதமானோர் கடல் கடந்து இந்தியாவுக்குச் சென்றுவிட்டதாகவும் மீதி ஐந்து வீதமானோர் காடுகளுக்குள் மறைந்திருந்து பீதியுடன் காலத்தைக் கழிப்பதாகவும் சொல்லப்படுகிறது.

மக்கள் வெளியேறியுள்ள வீடுகளில் உள்ள தளபாடங்கள் மற்றும் உடுபிடவைகள் அங்கிருக்கும் வேறு சமூகத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாம்.

இப்பகுதியில் உள்ள மக்கள் வெளியேறியதால் அவர்களின் வயல்களில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண்மையும் பாதிக்கப்பட்டுள்ளது.

முற்றி விளைந்த நெல்லை அறுவடை செய்யாததால் பன்றி போன்ற மிருகங்களால் நாசமாக்கப்பட்டு விட்டதென்றும், களவாகவும் பலர் நெல்லைக் கொண்டு செல்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இப்பகுதிகளிலுள்ள வீதிகளும் வெறிச்சோடிக் கிடக்கிறதாம். (மா)

# நமது நோக்கு

## வீரக் கண்ணீர் வெற்றியின் அறிகுறி

தமிழக அரசியல் இவ்வாரம் தொடக்கம் முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரன் தலைமையில் எவ்வித தளப்பமுமின்றி செயற்படத் தொடங்கிவிட்டது.

மரணத்தை எதிர்த்துப் போராடி வெற்றியுடன் திரும்பிய எம். ஜி. ஆரின் சிகிச்சை வரலாறு ஒரு தனி இலக்கியமென்பது எல்லோரும் அறிந்ததல்ல.

மருத்துவ சாத்திரத்தில் மிகவேகமாக முன்னேறும் அமெரிக்காவில், சிகிச்சை பெற்ற முதலமைச்சர் 68-வது வயதில் மிக ஆபத்தான சத்திரசிகிச்சைக்குள்ளான வரலாறு பல சோக, ஆனால் சுவையான சம்பவங்களைக் கொண்டது.

அன்று உயிருடனிருந்த பிரதமர் இந்திராவின் ஆசியுடன் அமெரிக்கா சென்ற எம். ஜி ஆர். மிகக் கவலைக்கிடமான நிலையில் இருந்ததை அறிந்த தமிழக மக்கள், சமுத்திரம்போல் அலைமோதி எவ்வகையிலும், என்ன செலவிலும் தலைவரின் உயிரை மீட்டே ஆகவேண்டுமென்று மந்திரிசபைக்கு கட்டளையிட்டனர்.

மக்கள் சக்தியும், நோயாளியின் அபாரமான மனத்திட்பமும் பல அபாயமான கட்டங்களில் உயிரைக் காப்பாற்ற உதவியதை மருத்துவரின் அறிக்கையில் காணமுடிகிறது.

பெப்ரவரி 4-ம் திகதி சென்னை திரும்பிய எம். ஜி. ஆர். தமது வலக் [நோயுற்ற] கையை வீசிக்கொண்டு சுமார் 50,000 மக்களையும் ஆதரவாளர்களையும் கண்டு வணக்கம் செலுத்தியபோது கண்ணீர் வடித்த காட்சி சோகத்தின் உச்சமெனலாம்; வெற்றியில் பிறந்த சோகம் இது.

அப்பெருங் கூட்டத்திலிருந்த எவரும் காத்திராத வகையில் குணமடைந்த எம். ஜி. ஆருக்கு இன்னொரு சந்தர்ப்பம் காத்திருந்தது.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமர் ரஜீவ்காந்தியை தமிழக முதல்வர் எம் ஜி. ராமச்சந்திரன் உணர்ச்சிமேலீட்டால் கட்டித் தழுவியபோது, கண்களிலிருந்து வடிந்த கண்ணீரை இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி தமது கைகளால் துடைத்துவிட்டு அவருக்கு ஆறுதல் கூறினார்.

இது எமது பத்திரிகை குறிப்பிடும் செய்தி; இந்தக் கண்ணீர் வடிப்புக்கும், துடைப்புக்கும் வியாக்கியானம் செய்வது இலகுவான காரியமா?

பத்திரிகைக்காரருக்கும் இலக்கிய இரசிகர்களுக்கும் இச்சம்பவம் ஒரு பெரும் வேட்டை நிலம்; அதில் இறங்குவது எமது நோக்கமல்ல. சாதாரண மனிதன் இதற்கு என்ன அர்த்தம் செய்து கொள்வானென்பது போதுமானது.

தமிழ்மக்களின் இன்ப துன்பங்களை குறைநிறைகளை தமது சொந்தப் பொறுப்பெனக் கொண்டு மக்கள் சேவையில் உயர்ந்த உத்தமர் எம். ஜி. ஆர் தமிழக முதல் அமைச்சர் மட்டுமல்ல பாரதத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு கொண்டவர்.

தமது சிரேட்ட பங்காளியும் தமக்கு உறுதியான உற்சாகமளித்த உலகின் பெருந்தலைவரான இந்திராவைக் காண முடியவில்லை என்ற கவலை அவருடைய வெற்றிவருகைக்கு பெருங் கண்ணூறாக இருந்தது; அதேசமயம் அவர் மறைந்தாலும் அவருடைய அருமை மகன் அந்த இடத்திலேயே மிகப்பெரும் பலம் பெற்றிருந்தது சோகத்தின் மத்தியில் ஆனந்தம்.

இந்த ஆனந்த உணர்ச்சிக்கு ஆமாச் சொல்வது போல சோக உணர்வைப் புரிந்த புதிய பிரதமர் அதற்கு ஆறுதலளிக்கும் வகையில் அவருடைய கண்ணீரைத் தம் கையால் துடைத்த காட்சி இந்திய வரலாற்றில், ஏன் இந்தோ-இலங்கை விவகாரங்களிலும் ஒருகருத்து நிறைந்த காட்சியாகும்.

தமிழகத்தில் இன்று தஞ்சமடைந்திருக்கும் இலங்கைத் தமிழ்மக்களும், தமிழகமே எமக்கு உறுதுணையளிக்க வேண்டுமென்று தவங்கிடக்கும் இந்நாட்டின் தமிழர்கள் அனைவரும் இந்தக் கண்ணீர்க்காட்சி அபயமளிக்கும் காட்சியாகக் கருதுவதற்கு நியாயம் உண்டு.

நாகரிக உலகம் இன்று எமக்கு நிவாரணமளிக்கத் தாமதப்பட்டாலும் இந்தியாவின் மத்திய ஆட்சியும், தமிழக அரசும் எவ்வித கருத்துவேறுபாடுமின்றி எங்கள் துயரைத் துடைக்க முன்வருமென்பதே இச்சம்பவத்தின் உள்ளுடன்போல் தெரிகிறது.

## ஆஸ்பத்திரி வாகனங்களை திருப்பி ஒப்படையுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கான சுகாதார சேவைகள் யாவும் ஸ்தம்பிதநிலையை அடைந்துள்ளன. நிறுவனங்களில் போதிய மருந்துகள் இல்லை இதனால் வைத்திய நிலையங்கள் யாவும் இயங்கவில்லை கையிருப்பில் உள்ளவற்றை கொண்டு இன்னும் சில நாட்கள் மட்டுமே சமாளிக்க முடியும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட வைத்திய நிபுணர்களும் சுகாதார திணைக்கள ஊழியர்களும், நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவைக்காக பாவிக்கப்படும் வாகனங்கள், இயக்கங்களின் பெயரால் அபகரிக்கப்படுவதை மிகுந்த மன வேதனையுடன் நோக்குகின்றோம். சுகாதார சேவைகளும் பொதுமக்களின் சுகாதார தேவைகள், போஷாக்கு உணவு விநியோகம் என்பவற்றை நிறைவேற்றுவதற்காக தனது சேவையை திருப்திகரமாக ஆற்றி வந்துள்ளது. இந்த சேவைகளுக்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படுபவை எமது திணைக்கள வாகனங்களே. மருந்து' பிராண வாயு' தடுப்பூசி, திரிபோஷா, மற்றும் சுகாதார சேவைகளுடன் தொடர்பான அத்தியாவசியப் பொருட்கள் யாவும் எமது திணைக்கள வாகனங்கள் மூலமே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஆகிய மாவட்டங்களிலுள்ள சகல வைத்திய நிறுவனங்களுக்கும் அவ்வப்போது விநியோகிக்கப்பட்டு வந்துள. அதுமட்டுமல்ல, வைத்திய நிறுவனங்களில் ஏற்படும் மருத்துத் தட்டுப்பாடுகளை உடனுக்குடன் நேரில் சென்று கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கான துரித

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

[யாழ்ப்பாணம்]

திரு. வி. தம்பிராஜா [ஹலிஎல], திரு. வி, அப்பாத்துரை [பசறை], திரு. கே. கணேசு [பதுளை], திரு. ரி. முத்தையா [ஹொப்ரன்], செல்வி பி. கணபதிப்பிள்ளை [பதுளை[, செல்வி வை முத்துச்சாமிக் குருக்கள் [பதுளை], திருமதி என். இரத்தினசபாபதி(லுனுகல), திரு எஸ். தியாகராஜா [ஹப்புத்தளை], திருமதி பி தியாகராஜா (ஹப்புத்தளை), திருமதி ஆர். சதாசிவம்[ஹப்புத்தளை], திரு. ஆர். தம்பிராஜா [பண்டாரவளை], திரு. எஸ். இரத்தினசிங்கம் [இரத்தினபுரி], திரு. சி. தணிகாசலம் [ஹலிஎல], திரு எஸ். நல்லையா [கஹாவத்த] திரு. எஸ். முருகேசு[இரத்தினபுரி], திரு வி. முத்துலிங்கம் [இரத்தினபுரி], திரு கே. அருணாசலம் [இரத்தினபுரி], திரு. எஸ் வீரசிங்கம் [நிவித்திகல], திரு எம்: பத்மநாதன் [இரத்தினபுரி], திருமதி என். அருளையா [இரத்தினபுரி]. திருமதி எல். ஜி, குருநாதன் [இரத்தினபுரி , திருமதி எஸ். குமாரசாமி [கஹாவத்த], திரு. எஸ். பி. இளமுருகனார் [பண்டாரவளை] திருமதி என். கமலேஸ்வரி [இடலகசின்ன], திருமதி எம். ஆர். இராமசாமி [டொம்மோடெற), திருமதி ஆர்.செல்வராஜா ஹப்புத்தளை திரு கே. செல்வர ஜா [ஹப்புத்தளை]. திருமதி பி அம்பலவாணர் [கொஸ்லான்கந்த], திரு. ஆர். கதிரமலர்[பண்டாரவளை], திரு. எஸ். பொன்னையா[நெடுங்கேணி], திருமதி ரி செல்வராஜா [வவனியா], திருமதி எஸ். தேவதாசன் (வவனியா), திருமதி கே. சுப்பிரமணியம் (செட்டிக்குளம் , திருமதி வி. குணநாயகம்[வவனியா], திருமதி எம். சபாரத்தினம் [வவனியா[ திருமதி என். இரத்தினம் [வவனியா], செல்வி சிவஞானம் சிவசம்பு (வவனியா), திருமதி ஈ. தர்மகுமார்[வவனியா], திரு என். பேரம்பலம் [செம்மடுக்குளம்], திரு. சி மனோகரன் [மாங்குளம்], செல்வி எஸ், பரமநாதன் [ஓமந்தை], திருமதி பி. நவரத்தினம் [வவனியா], திருமதி எஸ். விநாயகமூர்த்தி [பொகவந்தலாவ], திரு. வி. தனலிங்கம் [தலவாக்கொல], திரு. வி. நாகையா [நானுஓயா], திரு எஸ். பி. மனுவேல்பிள்ளை [ஹல்கிரன் ஓயா] திரு. கே. பரமராசு [பூண்டுலோயா], திரு. கே. இராசலிங்கம் [நானுஓயா], செல்வி எஸ். மகாசிவலிங்கம் [பத்தன] திரு. என். கனகரத்தினம் [அக்கரப்பத்தன], திரு. எஸ். சிவசுப்பிரமணியம் [அப்கொட் திருமதி ஆர். சண்முகநாதன் [வத்தேகொட], திரு. கே பற்குணனந்தன் [நானுஓயா] திரு கே. நவரத்தினம் [கந்தப்பொல], திரு. கி, பெனடிக்ற் [டிக்கோயா], செல்வி ஜே. இலங்கைநாதர் [நோர்வூட்], திருமதி வி கந்தசாமி [மஸ்கெலியா], செல்வி என் ஜெயராணி [அக்கரப்பத்தன] திரு. எஸ். குலசேகரம் (ஹல்கரன் ஓயா), திருமதி ஐ. மாணிக்கம் (டிக்கோயா, திருமதி எம். சிவபுண்ணியம் பிள்ளை (மஸ்கெலியா), திருமதி எஸ் சிவசுப்பிரமணியம் (மஸ்கெலியா), திருமதி ஏ. ஜோசப் (டிக்கோயா). திரு. கணேஸ்வரலிங்கம் (பொகவந்தலாவ), செல்வி வி. மகேஸ்வரி (பூண்டுலோயா), செல்வி பி. கமலாதேவி (அக்கரப்பத்தன), திருமதி பி. சோமசுந்தரம் (கந்தப்பொல), திருமதி எஸ். என் செல்வகுமார் (நுவரெலியா), திரு. எம்.எஸ். மாணிக்கவாசகர் (பொகவந்தலாவ), திரு வி சோமசுந்தரம் (கந்தப்பொல), திரு ரி சிவராஜா (தலவாக்கொல்லை), திரு. கே. ஆறுமுகம் [றம்பொட], திருமதி எல். கருணைராஜா (தலவாக்கொல்லை), திரு. கே. ராஜகோபால் (கந்தப்பொல), திரு. எஸ். எஸ் கருணாதிராசா (தலவாக்கொல்லை), திரு. வி சச்சிதானந்தபிள்ளை (பூண்டுலோயா), திரு. ஏ. இரத்தினசிங்கம் [நுவரெலியா], திரு. எஸ். ரி பாலசிங்கம் [நோட்டன்பிறிஜ்ட்], திரு. எம். கனகரத்தினசிங்கம் றுசல்ல], திரு. எஸ். பாலச்சந்திரன் (ஹல்கரன் ஓயா],

[மிகுதி நாளை வரும்]

## அகற்றப் பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர் வீதிகளில் குவிந்து கிடக்கும் குப்பைகள் ட்ராக்டர் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் பல வீதிகளில் டிராக்டர்கள் குப்பைகளை அகற்றின. (க)

## திருக்குறளை மனனம் செய்தால் சாந்தம், பயமின்மை தேசப்பற்று ஏற்படும்!

(உடுவில்)

''எமது நாட்டின் இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு இளைஞனும் திருக்குறளை மனனம் செய்து கொள்வதன் மூலம் உள்ளத்தில் சாந்தம், பயமின்மை, தேசப்பற்று ஆகியனவற்றை பெறமுடியும்''

நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் தினத்துக்கான திருக்குறள் மனன, பேச்சுப் போட்டிகளை ஆரம்பித்து வைத்து பேசிய அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

திருவள்ளுவர் தினவிழாவை ஒட்டி மாணவர் மத்தியில் திருக்குறள் மனனம், பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன' நவாலி அட்டகிரி பாடசாலை அதிபர் திரு வல்லிபுரம், நவாலி விவேகானந்த பாடசாலை அதிபர் திரு. நடராசா, இளைப்பாறிய ஆசிரியர் திரு கனகரட்ணம ஆகியோர் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தனர்.

அட்டகிரி அதிபர் திரு.வல்லிபுரம் போட்டிமுடிவுகளை அறிவித்து உரையாற்றுகையில், முற்காலத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்கள் குறள் கண்ட வாழ்வு வாழ்ந்தனர் என்றும் தற்காலத்தில் அப்படியான மக்களைக் காண்பது அரிது என்றும், குறள் கண்ட வாழ்வின் மூலம் நீங்களும் அறிஞர்களாகத் திகழ இதுபோன்ற போட்டிகள் அவசியம் என்றும் எடுத்துக் கூறினார்.

மகாவித்தியாலய உப அதிபர் திரு வி. திருஞானசம்பந்தபிள்ளை நன்றியுரை வழங்கினார்.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு அண்மையில் நடைபெறவிருக்கும் திருவள்ளுவர்தின விழாவில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

### மத்திய பிரதேசத்தில் பெரும்பான்மை——

# மாநில சட்டசபை தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றி

[புதுடில்லி]

மத்திய பிரதேஷில் அமோக வெற்றி பெற்ற இந்திரா காங்கிரஸ் அங்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வலுவைப் பெற்றுள்ளது.

பீகாரிலும், உத்தரப்பிரதேசத்திலும் தொடர்ந்து இந்திரா காங்கிரஸ் முன்னணியில் நிற்கிறது.

வெற்றி பெற்ற முக்கிய தலைவர்களில் உத்தரப் பிரதேச முதலமைச்சர் திரு. என். டி. திவாரியும் ஐந்து சக அமைச்சர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

மாநிலசட்டப்பேரவைஉறுப்பினர் பாரதீய ஜனதா கட்சித் தலைவர் திரு. ராஜேந்திரகுமாரி குப்தாவும் வெற்றிபெற்றுள்ளார்.

மத்திய பிரதேஷ் முதலமைச்சர் திரு அர்ஜுன்சிங் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரது சகஅமைச்சர்கள் பதினேழுபேரும் வெற்றிபெற்றுள்ளனர். 3 பேர் தோல்வியடைந்துள்ளனர்

மத்திய பிரதேஷ் துணை முதலமைச்சர் திரு சிவானு சோலங்கி, மாநில இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு மோதிலால் வோரா, மாநில பாரதீய ஜனதா கட்சித் தலைவர் திரு. கைலாஸ்யோசி ஆகியோர் வெற்றிபெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

மத்திய பிரதேஷ் சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. சுந்தர் வால் பட்டா அன்சா தொகுதியில் தோற்றுவிட்டார். ஆனால் வோர்ச்பூர் தொகுதியில் அவர் வெற்றி பெற்றுள்ளார்.

சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் முதலமைச்சர் திரு வீரேந்திர குமார் சக்கிளேச்சா தோல்வியுற்றார்

பீகார் இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. பின்டேஸ்வர் திவேக் வெற்றி பெற்றுள்ளார்.

320 தொகுதிகளைக்கொண்ட மத்தியபிரதேசத்தில் இதுவரை 285 முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் இந்திரா காங்கிரஸ் 222 தொகுதிகளையும் பாரதீய ஜனதாகட்சி 52 தொகுதிகளையும் பிடித்துள்ளன. [து]

---

## அவுஸ்திரேலியாவில் காட்டுத் தீ

(கான்பரா)

அவுஸ்திரேலியா தலைநகரான கான்பரா பிரதேசத்தில் காட்டுத் தீ பரவியதால் அங்கு ஒரே புகைமண்டலமாக இருந்தது.

இத்தீயினால் பல வீடுகளும், தொழிற்சாலைகளும் நாசமாகின. கால்நடைகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

தீயணைப்பு படையைச் சேர்ந்த ஒருவரும், விவசாயி ஒருவரும் இத்தீ விபத்தினால் எரிகாயங்களுக்குள்ளாகி மரணமானார்கள். [இ]

---

### பந்தோபஸ்து நிதிக்கு பணம் கழித்ததை எதிர்த்து

## நீதிமன்றத்தில் வழக்கு

[கொழும்பு]

தனது முன்அனுமதியின்றி தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒரு நாள் சம்பளத்தை அறவிட்டிருப்பது, அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

இவ்வாறு தெரிவித்து ரயில்வேப்ட குதி ஊழியரான திரு. டி. பிரேமலால் பெரேரா உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர்களாக புகையிரத பொது முகாமையாளர் திரு. ஜி. பி. எஸ். வீரசூரியா, சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதி, தேசியபந்தோபஸ்து அமைச்சின் செயலாளர் திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

திரு. பிரேமலால் பெரேரா 1985-ம் ஆண்டு ஜனவரி மாதம் அவரது சம்பளத்தைப் பெற்றுக் கொண்டபோது அதில் 19 ரூபாய் தேசிய பாதுகாப்பு நிதிக்கென கழிக்கப்பட்டிருந்தது. இப்படிக் கழித்துக் கொள்ள மனுதார், எவருக்கும் தனது சம்மதத்தை தெரிவிக்கவில்லை.

திரு. பிரேமலால் பெரேரா கல்கிசையைச் சேர்ந்தவர்.

---

## வடக்கு கிழக்கு குடியேற்றம் அமெரிக்கா கடும் எதிர்ப்பு

[வாஷிங்டன்]

இலங்கையில் தமிழர்கள் பாரம்பரியமாகவாழும்வடக்கு கிழக்கு பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியமர்த்தும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை அமெரிக்க வெளிநாட்டு பிரதி துணைச் செயலாளர் ரேபேட் பேக் கடுமையாக எதிர்த்துள்ளார்.

அவர் தென்கிழக்காசிய விவகாரங்கள் தொடர்பான அமெரிக்க காங்கிரஸ் உபகுழு முன் உரையாற்றும்போதே இவ்வாறு கண்டித்துள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்னைக்கு இராணுவ ரீதியாக தீர்வுகாண முடியாது. அரசியல் ரீதியாகவே இப்பிரச்னைக்கு தீர்வு காணமுடியும் என்று அமெரிக்கா நம்புகிறது.

''இந்நிலையில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழும் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியமர்த்தும் திட்டம் தமிழ்மக்கள் மன நிலையைப் பாதித்து இப்பகுதிகளில்மேலும் வன்செயல்களை அதிகரிக்கச் செய்யும். இதனால் இலங்கையில் பிரச்னைகள் மேலும் அதிகரிக்கும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார். [இ-சு]

---

## மானிப்பாய் பல நோ. கூ. சங்க விசேடகூட்டம்

[மானிப்பாய்]

மானிப்பாய் ப. நோ. கூ. ச. பொதுச்சபைக் கூட்டம் இம் மாத இறுதியில் நடக்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் திரு. சு. தர்மசீலன் தெரிவித்தார்,

---

## உணவுப் போஷாக்கு பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். திட்டமிடல் பணிமனை கோப்பாய் கல்வி மூலவள நிலையத்துடன் இணைந்து வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவுப் போஷாக்குப் பயிற்சிநெறியின் போது நடாத்திய பரீட்சையில் செல்வி இ. அனுஷபவானி முதலாம் இடத்தையும், செல்வி இ. கோமளாதேவி இரண்டாம் இடத்தையும், செல்வி பொ பத்மராணி மூன்றும் இடத்தையும் பெற்றனர். அண்மையில் நடந்த சான்றிதழ் வழங்கும் வைபவத்தில். இவர்களுக்குப் புத்தகப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

---

### பாகிஸ்தான் விமானங்களை திசைதிருப்ப உதவியவருக்கு——

## மரணதண்டனை

[கராச்சி]

பாகிஸ்தான் விமானங்களை 1981ம் ஆண்டு திசைதிருப்புவதற்கு உதவிய குற்றச்சாட்டில் வலூஸ் என்பவருக்கு பாகிஸ்தான் ராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

ஏழு பிள்ளைகளுக்குத்தந்தையான இவருக்குக் கருணை காட்டப்பட வேண்டுமென்று கோரப்பட்டபோதிலும், அவர் கராச்சி மத்திய சிறைச்சாலையில் நேற்று அதிகாலை தூக்கிலிடப்பட்டார்.

இவர் விமானங்களைத் திசை திருப்புபவர்களுக்கு பயணச் சீட்டுக்களை வழங்கி உதவினார் என்று இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

தடைசெய்யப்பட்ட மக்கள் கட்சியின் அங்கத்தவர் இவர்.

---

## குருநகரிலிருந்து முதலில் வெளியேறிய குடும்பங்கள்!

(யாழ்ப்பாணம்)

குருநகரிலிருந்து வெளியேறுமாறு கூறப்பட்ட குடும்பங்களில் நேற்று முன்தினம் ஐந்து குடும்பங்கள் வெளியேறிவிட்டதாகயாழ்,பிரஜைகள் குழுவிற்குப் புகார் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக யாழ். பிரஜைகள் குழுவினர் நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்தைச் சந்தித்துப்பேசியபோது, இதுபற்றி மேலிடத்திலிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என தெரிவித்ததாக கூறப்படுகிறது.

குருநகரிலிருந்து வெளியேறும் குடும்பங்களை நாவற்குழி வீடமைப்பு திட்டத்தில் குடியமர்த்துவதற்கான முயற்சி ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'இடம்கிடைத்தால் வெளியேறுவோம்' எனசிலகுடும்பங்கள் தெரிவித்துள்ளனவாம். (க)

---

## தபால் வான் கடத்தல்

[யாழ்ப்பாணம்]

யாழ். தபால் கந்தோருக்குரிய தபால் வான் ஒன்று நேற்று முன்தினம் காலை இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டது. (க)

---

## நிறைவேறியது!

(கொழும்பு)

தேசியபாதுகாப்பு நிதியை ஏற்றுக் கொள்வதற்கான சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் 37 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டமூலத்தினை ஆதரித்து 38 வாக்குகள் அளிக்கப்பட்டன. எதிராக கலவான தொகுதி எம்பியான சரத்முத்தேட்டுவேகம மட்டுமே வாக்களித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மக்கள் ஐக்கிய முன்ணனியும் இச்சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

---

### சிட்னியில் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் பிரவேசித்தபோது——

## அணு ஆயுதங்களை எதிர்க்கும் பலர் ஆர்ப்பாட்டம்!

[சிட்னி]

இரண்டு அமெரிக்க யுத்தக் கப்பல்கள் நேற்றுமுன்தினம் சிட்னி துறைமுகத்தில் பிரவேசித்தபொழுது அணுவாயுதங்களை எதிர்க்கும் பலர் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

அவுஸ்ரேலியா கடற்படையினருடன் சேர்ந்து ஒத்திகைகளில் பங்குபற்றுவதற்காகவே இந்த அமெரிக்க யுத்தக்கப்பல்கள் இங்கு சென்றன.

அணுவாயுத எதிர்ப்பு இயக்கங்களைச்சேர்ந்தவர்கள் பெரிய படகுகளில் அணு ஆயுத எதிர்ப்பு சுலோகங்களை கட்டிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

துறைமுகப் பொலிசாரும், கடற்படையினரும் இவர்களைத் தடுப்பதில் ஈடுபட்டனர்.

பல ஆர்ப்பாட்டக்காரர்கள் இதில் கலந்து கொண்டார்கள். அமெரிக்காவின் யுத்தக் கப்பல் ஒன்றுக்கு நியூஸிலாந்து கடந்தவாரம் அனுமதியளிக்க மறுத்து அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (து)

---

## நிரந்தர அதிபர் இல்லாமையால் கல்விப் பாதிப்பு

(சுழிபுரம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற்கு நீண்டகாலமாக நிரந்தர அதிபர் ஒருவர் இல்லை. மூன்று வகுப்புகளுக்குக் கல்வி கற்பிக்க ஆசிரியர் இல்லை. ஆண்மையில் இரண்டு அதிபர்களின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் அவர்கள் பொறுப்பை ஏற்கவரவில்லை மூன்று வகுப்புக்களுக்கு ஆசிரியர்கள் பொறுப்பாக இல்லை. இதனால் மாணவர்கள் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மகாவித்தியாலய அபிவிருத்திச் சபையினர் வித்தியாலய நிலைமையை விளக்கி வடபகுதி கல்வி அதிபருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

---

### இந்திய முன்னாள் பிரதமர் ——

## இந்திரா கொலை முயற்சி: நீர்கொழும்பு நீதவான் முன் ஆஜர்

(கொழும்பு)

1981ம் ஆண்டு முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை கொலை செய்ய முயற்சி செய்த குற்றச்சாட்டின் பேரில் 'ஏயர் லங்கா' விமான நிலைய பொறியிலாளர் ஒருவர் நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

முன்னர் 'எயர் இந்தியா' விமான நிலையத்தில் பணி புரிந்த இந்தியரான இவர் 1981ம் ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அமெரிக்கா பயணமான போது அவர் புறப்பட விருந்த விமானத்தின் 'வயர்கள்' வெட்டப்பட்டிருந்ததை விமான நிலைய அதிகாரிகள் அப்போது கண்டு பிடித்தனர்.

இந்த வயர்கள் வெட்டப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இவர் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு நீதவான் எச். ஜி. அம்பாபிட்டியா இவரை பிணையில் செல்ல அனுமதித்தார். (இ-சு)

---

## அரச செலவில் அடக்கம்

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பளை அரசினர்வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலம் ஒன்று அடையாளம் காணப்படாத நிலையில் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

தெல்லிப்பளைஅரசினர் வைத்தியசாலையில் இராணுவத்தினரால்சேர்ப்பிக்கப்பட்ட 27வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் எவராலும் அடையாளம் காணப்படவில்லை.

இவரின் மரணம் குறித்து விசாரணை நடாத்திய தெல்லிப்பளை மரணவிசாரணை அதிகாரி திரு. என். தம்பிராசா பகிரங்கத் தீர்ப்பு வழங்கியதுடன் அரசாங்க செலவில் அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டார். (இ)

## ஆஸ்பத்திரி

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த வாகனங்களே பயன்படுத்தப்பட்டு வந்தன,

வரட்சிக் காலம் தொடங்கியுள்ளதால், தொற்று நோய்கள் பரவும் அபாயம் நிலவுகிறது ஆனால், அவற்றுக்கெல்லாம் சிகிச்சை அளிக்கப்பட முடியாதநிலை. ஏற்கனவே வடபகுதியில்உள்ளமற்றுமோர் மாவட்டம் இந்தப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

எமது சுகாதார சேவைகள் இப்படிச் சீர்குலைந்து போவதால், எமது வைத்திய நிபுணர்களில் பலரும் மனதில் விரக்தி கொண்டு நாட்டைவிட்டு வெளியேறும் நிலையில் உள்ளனர். ஏற்கனவே பலர் வெளியேறிவிட்டனர். சிலர் வெளியேற ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர் இன்னும் பலர் எதிர்காலத்தில் வெளியேறக்கூடும். இவற்றால் எல்லாம் பாதிக்கப்படப்போகிறவர்கள் யார்? அப்பாவிப் பொது மக்கள் தான்.

எனவே பொது மக்களின் பெயரால், பொது மக்களின் சார்பாக பொது மக்களின் சேவையை உள்ளத் தூய்மையுடன் மனதில் கொண்டு சம்பந்தப்பட்டவர்களை உருக்கமாக வேண்டிக்கொள்கிறோம், தயவு செய்வு நீங்கள் கடத்திச் சென்ற எமது திணைக்கள வாகனங்களை உடனடியாக திருப்பித் தாருங்கள். (க)

யாழ். வின்சர் மினி
7-3-85 வியாழன் முதல்
சிவாஜி-பிரபு-K R.விஜயா
ராதா நடித்த
'சிம்ம சொப்பனம்'
[கலர்]
தினசரி 10-30, 2-15

றீகல் மினி
தினசரி 10-15, 1-30
விஜயகாந் - ரேவதி
நடிக்கும்
வைதேகி
காத்திருந்தாள்

றீகல்
தினசரி 10-30, 2-00
AN OFFICER AND
A CENILEMAN
(Adnlts only)

மனோகரா மினி
இன்று முதல்
கண்ணன். ராதா
காதல் ஓவியம்
(கலர்)

MANOHARA
Daily 10-30, 2-5!, 4-15
Muhammed Ali
in
BODY AND SOUL
(Strictly For Adults)
கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும். பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
சிவாஜி, கே.ஆர்.விஜயா,
நடித்த
கிரஹப்பிரவேசம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-15, 12-15, 2 30
சிவாஜி, கே. ஆர். விஜயா
பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)

## கம்யூட்டர் முறையில் கடவுச்சீட்டு!

(கொழும்பு)

''ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட 'பாஸ்போர்ட்' வைத்திருப்பதனை தடுப்பதற்காக விநியோக முறை கம்யூட்டர் மயமாக்கப்படவுள்ளது.'' என்று குடிவரவு - குடியகல்வு திணைக்கள பிரதி கட்டுப்பாட்டாளர்திரு தெரன் பெர்ணண்டோ தெரிவித்துள்ளார்.

ஒருவர் ஒரு பாஸ்போர்ட் மாத்திரம் வைத்திருக்கலாம் என்ற சட்டம் இருக்கின்ற போதும் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட பாஸ்போட்டுகள் வைத்திருக்கிறார்கள். ஆயினும் இதனை தடுப்பதற்கு இதுவரை எந்தமுறையும் இருக்கவில்லை. இக்குறைபாட்டை நீக்கு முகமாக பாஸ்போட் விநியோக கம்யூட்டர் மயமாக்கம்படவுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-சூ]

## பனை அபிவிருத்தி சபையில் கொள்ளை

(வண்ணார்பண்ணை)

பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பெறுமதி மிக்க பொருட்கள் சில திங்கள் இரவு இனந்தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சபைக்குச் சொந்தமான ஏழு தட்டச்சு யந்திரங்களும், இரண்டு றோனியோ யந்திரங்களும் காகிதவகைகளும் களவாடப்பட்டுள்ளதாக இச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்திருட்டினால் இச்சபையின் பிரதான நிர்வாக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்புச் செயலகத்தின் மேல் மாடியில் இயங்கும் இச்சபை அலுவலகத்திற்குச் சென்ற இனந்தெரியாத கோஷ்டியினர் பூட்டுக்களை உடைத்து மேற்படி பொருட்களை எடுத்துச் சென்றதாக தெரிகின்றது.

உயிர் வாழும் பல ஆயிரக் கணக்கான மக்களின் நன்மை கருதி அண்மையில் இலங்கை பனை அபிவிருத்தி சபையில் கொள்ளையிடப்பட்ட பொருட்களை மீண்டும் தந்துதவுக' என பனை அபிவிருத்தி சபையால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அண்மையில் இலங்கை பனை அபிவிருத்தி சபையில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டமை தெரிந்ததே. இது தொடர்பாக விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் யாழ்ப்பாணத்துக்கு அந்நிய செலவாணியை தேடித்தரும் ஒரு பிரதான மூலவளம் மட்டுமன்றி தமிழ் மக்களின் அடிப்படை பொருளாதாரமாகவும் அமைந்துள்ளது ஆனதினால் தமிழ் மக்களது இந்தப் பொருளாதாரம் வளர்ச்சியடைய இந்த உபகரணங்களை தந்துதவுக என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா[

### கோரிக்கை

(கல்வியங்காடு)

''தமிழ் மக்களின் பிரதான மூலவளமான பனையை நம்பி

## இது வரை 14, 460!

(சென்னை)

65 குடும்பங்களைச் சேர்ந்த 102 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று முன் தினம் இராமேஸ்வரம் கரையை அடைந்தனர்.

இவர்களையும் சேர்த்து இப்பொழுது 14,460 இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## குப்பைகள் அகற்றப்பட்டது

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக எரிக்கப்பட்ட நிலையில் கடந்த இருமாதங்களாக காணப்பட்ட கார் இளைஞர்களினால் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் உழவுயந்திரப் பெட்டியில் ஏற்றப்படடு அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டது.


## பிரிவுபசார வைபவம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த மூன்று வருடங்களாகக் கடமையாற்றிய மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். எஸ் குகதாசனுக்கு ஆஸ்பத்திரி ஊழியர் நலம்புரிச் சங்கத்தால் அண்மையில் பிரிவுபசார வைபவம் நடத்தப்பட்டது

இவர் தமது மேற்படிப்பைத் தொடர அமெரிக்கா செல்வதாகவும் இவரது இடத்திற்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை யெனவும் தெரியவருகின்றது.

## அழியாத ஓவியம்



பெயருக்கேற்ற உருவம் மோகனதாஸ். இளமையின் மலர்ச்சி ததும்பும் இனிய முகம்.

யாரையுமே மனம்நோக வைக்காத மனோபாவம். தொழிலில் தெய்வீ ப்பற்று குடும்பத்தில் கடமைப்பாசப இத்தனையும் கொண்ட ஓவிய ஆசிரியர் மோகனதாஸின் மறைவு அவரை அறிந்த அனைவருக்குமே மாறாத சேகம் 24 வயதுக்குள் தன்னால் செய்யக்கூடிய நன்மைகளையெல்லாம் தான் கடமையாற்றிய கல்லூரிக்கும், தான் வாழ்ந்து வந்த சமூகத்துக்கும் தன்னை வளர்த்து ஆளாக்கிய குடும்பதினருக்கும ஒய்வின்றி, சலிபபின்றி செய்தார்

யாழ். கந்தர்மடத்தில் பிறந்த இவர் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தல் நான்கு வருடங்களே சித்திர ஆசிரியராகக் கடமையாற்றியிருந்தாலும் அவரது சேவை என்றுமே மறக்கமுடியாத அளவுக்கு உயர்ந்து நிற்கிறது அழியாத ஓவியமாக நிற்கிறது

விதி எவ்வளவு கொடுமையாது என்பது அவரது அகால மறைவினால் மீண்டும் வற்புறுத்தப்பட்டு விட்டதா?

அந்த மலர்ந்த மோகன முகம் இன்று நம்மிடையே இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாதிருக்கிறது.

—கணேஷ்

## ஒரு தாயின் வேண்டுகோள்— எனது மகனின் காரை ஒப்படையுங்கள்'!

[யாழ்ப்பாணம்]

''கடமையை சரிவரச் செய்து, நேர்மை, கண்ணியமாக உழைத்து மாதச் சம்பளத்தைப்பெற்று, எனது மகன் ஐந்து வருடகாலம் உழைத்த பணத்திலும், நான் ஆசிரியராக இருந்து உழைத்த பணத்திலும் மிச்சம்பிடித்து ஒரு காரை வாங்கி மகனுக்குக் வாங்கிச் கொடுத்தோம்.

யாழ். ஆஸ்பத்திரியில் நிறுத்தியிருந்தபோது இக் கார் [11 ஸ்ரீ 979] கடத்தப்பட்டு டது.

எனது மகன் டாக்டர் இ. கௌரிபாலன் மகப்பேறுப் பகுதியில் சேவை புரிவதால் எவ்வேளையிலும் வைத்திய சாலைக்குச் செல்லவேண்டும். தயவுசெய்து அவரது காரை அவரிடம் ஒப்படையுங்கள்.''

இவ்வாறு கரவெட்டியைச் சேர்ந்த திருமதி த. இரத்தினம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''நாம் மிகக் கஷ்டப்பட்டு உழைத்த பணம் எம்மிடம் எமது பொருளை ஒப்படையுங்கள்'' என்றும் அவ் வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

## "நமது பிரச்னைகளை நாமே தீர்க்கவேண்டிய நிலை"

(ஊர்காவற்றுறை)

''இன்றைய அரசியல், பொருளாதார பிரச்னைளால் ஒவ்வொரு தமிழ்ப் பகுதிகளும் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளது. அரச நிறுவனங்களெல்லாம் தமது கடமைகளைச் சிறப்பாக செய்யமுடியாத நிலையில் இருக்கின்றன. இந்நிலையில் எமது பிரச்னைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டிய கட்டாய நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளோம். இந்த நிர்ப்பந்தத்தின் விளைவாக மக்கள் அனைவரும் ஒரு குழுவாக செயற்பட வேண்டிய அவசிய தேவை காரணமாக தோற்றுவிக்கப்பட்டதே இந்தப் பிரஜைகள் குழு''

மேற்கண்டவாறு ஊர்காவற்றுறைப் பிரஜைகள் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளனர். தொடர்ந்து அவர்களது அறிக்கையில் கூறப்படுவதாவது:

''உங்களுக்கு ஏற்படுகின்ற எந்தவொரு பிரச்னைகளையும் ஊர்காவற்றுறை பட்டினத்தில் சுருவில் வீதியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் எடுத்துக்கூறி உங்கள் பிரச்னைகளைத் தீர்க்க எம்முடன் ஒத்துழையுங்கள்''

மேற்படி பிரஜைகள் குழுவின் தலைவராக திரு. பி.பாக்கியநாதன், பெ துச்செயலாளராக திரு. எஸ்.பி ஐயர், துணைச்செயலாளர் திரு எஸ் எஸ். குஹநாதன், திரு என் நாகராசா, இணைத்தனதிகாரிகளாக திரு ஆ சபாரத்தினம், திரு ஏ செல்வநாயகம் ஆகியோர் கடமையாற்றி வருவது அறிந்ததே.

## புதுச்சேரியில் இ. காங்கிரஸ்

(சென்னை)

புதுச்சேரி சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ்-அ தி மு க. கூட்டணி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது

யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் மொத்தமுள்ள 30 இடங்களில் இந்திரா காங்கிரஸ் 20 இடங்களிலும் பத்து இடங்களில் அ. தி. மு. கவும் போட்டியிட்டன. தி. மு. க. 22 இடங்களிலும் அதன் தோழமைக் கட்சிகள் மிகுதி இடங்களிலும் போட்டியிட்டன.

நேற்று நள்ளிரவுவரை வெளியான முடிவு விபரம் வருமாறு:- இ காங்கிரஸ்- 17, அ தி.மு.க-5, தி.மு.க-3, ஜனதா-1.

## 'வொய்ஸ் ஒவ் அமெரிக்க' நிலையத்தால் தமிழீழ வானொலியை தடுக்க முடியாதாம்!

(கொழும்பு)

தமிழீழ வானொலியை இலங்கையில் அமைக்கப்படவுள்ள வொய்ஸ் ஒவ்அமெரிக்கா' நிலையத்தால் தடுக்கமுடியாது என்று அமெரிக்க தகவல் திணைக்கள இயக்குனர் திரு. சார்ள்ஸ் டிக் தெரிவித்தார். 'வொய்ஸ் ஒவ் அமெரிக்க' அஞ்சல் நிலையத்தின் நிர்மாண வேலைகளை ஆரம்பித்துவைத்த பின்னர் பத்திரியாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

இரண்டு நாடுகளுக்குமிடையேயுள்ள தகவல் ஒத்துழைப்பு இந்த நிலையத்தால் பலப்படுவதாகவும் திரு. டிக் கூறினார்.

## 'இந்துவின்' நம்பிக்கை— இனப் பிரச்னை தீர்வுக்கு தட்சர் வலியுறுத்துவார்!

(சென்னை)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சரின் இலங்கை விஜயத்தின்போது ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவை தனிமையில் சந்தித்து இனப்பிரச்னை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று 'இந்து' பத்திரிகை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஆசியநாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஏப்பரல் மாதம் 11 ம் திகதி இலங்கை செல்லவுள்ள பிரிட்டிஷ் பிரதமர் 13 ம் திகதிவரை அங்கு தங்கியிருப்பார்.

இலங்கையில் அவர் தங்கியிருக்கும் நாட்களில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை தனிப்பட்டமுறையில் சந்தித்து இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுகாணுமாறு வலியுறுத்துவார் என 'இந்து. நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## தனியார் மருத்துவ கல்லூரிக்கு
# தெல்லிப்பளையில் காணி!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் தனியார் மருத்துவ கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கென தெல்லிப்பளையில் காணி வழங்க, தெல்லிப்பளை கூட்டுறவு சங்கம் முன்வந்துள்ளது.

இந்த ஆலோசனை கூட்டத்தில், டாக்டர் ஜே பி. சி. பிலிப், டாக்டர் சேவியர், மற்றும் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை டாக்டர்கள், தெல்லிப்பளை கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வடபகுதிக்கு தனியார் மருத்துவக் கல்லூரியின் அவசியம் பற்றி இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தனியார் மருத்துவக் கல்லூரிக்கு முதலில் கட்டடங்கள் தேவை எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்டடங்கள் கட்ட 44 பேர்ச் காணி வழங்குவதாக தெல்லிப்பளை கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.''

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட டாக்டர் பிலிப் மேற்கண்ட தகவல்களை தெரிவித்தார்.

தெல்லிப்பளையில் அரசினர் ஆஸ்பத்திரி இருப்பதாகவும் அங்கு 300 படுக்கைகளுக்கு மேல் இருப்பதால், போதிய வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டால், நோயாளிகள், அதிகரிப்பார்களென்றும், இதனுல் மருத்துவ கல்லூரி மாணவர்கள் பயன்பெறலாம் என்றும், இதனுலேயே, தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு அருகில் இதனை ஆரம்பிக்க ஆலோசிக்கப்பட்டதாகவும், டாக்டர் பிலிப் மேலும் தெரிவித்தார். [க]

---

## பாதுகாப்புபேரவை அறிக்கை—
# ''கோவில் கொள்ளைகளை அனுமதிக்கக்கூடாது''

(யாழ்ப்பாணம்)

''கோயில் நகைகளையும், சொத்துக்களையும், ஆயுதமுனையில் அபகரிக்கும் கூட்டத்தினர் யார்? இந்த விபரீதத்தை எந்த விடுதலை இயக்கங்களும் அனுமதிக்கக்கூடாது''

தமிழர் விடுதலைப் பாதுகாப்பு பேரணி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது-

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

''எமது ஆலயங்களிலுள்ள நகைகளைக் கொள்ளையடிப்பதனுல் தமிழினத்தின் நாகரீகத்தையும் கலாசாரத்தையும் அழித்தொழிப்பதற்கு ஆயுதப் படையினருக்கு நாம் ஏற்படுத்திக் கொடுக்கும் ஓர் சந்தர்ப்பமாகும். எமது போராட்டப் பாதையில் கோயில் நகைகளையும், தனியார் சொத்துக்களையும் ஆயுதமுனையில் கொள்ளையடிப்பதால் எமது விடுதலைப் போராட்டம் எமது மக்களிடையே பாரிய எதிர்ப்பையும் வெறுப்பையுமே சம்பாதித்துக் கொள்ள முடியுமே தவிர ஆதரவையோ ஒத்துழைப்பையோ பெறமுடியாது என்பதையும் நாம் அனைவரும் உணர வேண்டியது அவசியமானதொன்ருகும்.

கோயில் சொத்துக்களையும் நகைகளையும் அபகரிப்பவர்கள் திருப்பி ஒப்படைத்தல் அவசியமானதொன்ருகும். எச்சந்தர்ப்பத்திலும் எமது இனத்தின் பொருளாதாரத்தைச் சூறையாடலையும் ஆயுத முனையில் அபகரிப்பதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறேம்.'' (க)

---

## ராமராவ்
## 3 தொகுதிகளிலும் அமோக வெற்றி!

(ஹைதராபாத்)

ஆந்திரா பிரதேச முன்னை நாள் முதலமைச்சரும், தெலுங்குதேசக் கட்சித் தலைவருமான திரு. என். ரி ராமராவ்தான் போட்டியிட்ட மூன்று தொகுதிகளிலும் அமோக வெற்றியீட்டியுள்ளார். (ரா)

---

# மரண அறிவித்தல்
## எஸ். இரத்தினசிங்கம் J. P.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பு - செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், இளைப்பாறிய விதானையாரும், சமாதான நீதிவானுமாகிய எஸ். இரத்தினசிங்கம் காலமானுர். இவர் தனபாக்கியத்தின் அன்புச் கணவரும், பத்மாவதி, குணநாயகம் (ஜேர்மனி), கிரிதரன் (தர்சினி மினிபஸ் உரிமையாளர்', நிர்மலன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), மைத்திரேயி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நடராசா (பதில் பொது முகாமையாளர், இலங்கை வங்கி), ஜெயந்தி, விமலாதேவி, ஜெகநாதன் (விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனுரும், புஷ்பா, ஷீலா, நிருபா, நிரஞ்சன், சுஜந்தன், கஜந்தன், யாழினி, தர்சினி. சுகாசினி, நிவேதிகா ஆகியோரின் பேரனும், கவிதாவின் பூட்டனும், திருநாவுக்கரசு, நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், அருளம்பலம், பராசக்தி, இரத்தினம்மா, தங்கவேல் (ஈழநாடு) ஆகியோரின் மைத்துனரும், வண்ணுர்பண்ணை காலஞ்சென்ற நடராசா - சின்னம்மா தமபதிகளின் மருமகனும், திருஞானசுந்தரத்தின் சகலனும், வாசுகியின் பெரியதந்தையுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 7-ம் திகதி வியாழக்கிழமை (இன்று) 10 மணியளவில் கோண்டாவில் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்களனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகபூஷணி அம்பாள் வீதி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவில். 2147

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இவ்னிகோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eeelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

---

## திருப்பத்தூரில் இந்திராகாங்கிரஸ் வெற்றி!

(சென்னை)

வடஆர்காடு திருப்பத்தூர் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த திரு எஸ். பீ. மணவாளன் வெற்றியீட்டியுள்ளார்.

கடந்த டிசம்பர்மாதம் இந்திராகாங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய திரு வை சண்முகம் காலமானதைத் தொடர்ந்தே இந்த இடைத்தேர்தல் நடைபெற்றது. (ரா)

---

## உப நூலகங்களுக்கு இடம் கிடைத்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உபநூலகங்கள் திறப்பதற்கு இரு இடங்கள் கிடைத்துள்ளன. அண்மையில் உபநூலகங்கள் திறக்க கட்டடங்களைத் தந்துதவுமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ வீ. கே. சிவஞானம் விடுத்தவேண்டுகோளை தொடர்ந்து இருஇடங்கள் கிடைத்துள்ளன.

யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் உபநூலகம், இம்மாதம் 22ம் தேதி ஆரம்பித்துவைக்கப்படும். மற்ற உப-நூலகம், நல்லூரில் ஆரம்பித்துவைக்கப்படும். (க)

---

## மகியங்கனையின் ஐ. தே. க. வேட்பாளர்

(கொழும்பு)

மகியங்கனை இடைத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட திரு. லக்ஷ்மன் செனிவிரத்ன ஐ தே. க. செயற்குழுவினுல் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் காலஞ்சென்ற மகியங்கனை எம். பி யும். தொழிலமைச்சருமான காப்டன் சி பி. ஜே. செனிவிரத்னவின் மகனுவார்.

---

### வடமராட்சி.,.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சியிலுள்ள பல பகுதிகள் ஆயுதப்படையினரால் நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் சுற்றிவளைக்கப்பட்டு பலத்ததேடுதல் நடாத்தப்பட்டது. மந்திகை, துன்னலை, அரசடி, நெல்லியடி, கட்டைவேலி, கரவெட்டி, வதிரி ஆகிய இடங்களிலே தெடுதல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை இத்தேடுதல் சம்பவத்தின்போது குண்டு ஒன்று வெடித்துச் சத்தம் கேட்டதாகவும், வாஙெனென்றில் வந்தவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால் சாரதி உட்பட 7 பேர் கொல்லப்பட்டதாகவும் மூவர் காயமடைந்ததாகவும் 12 கைதுசெய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது

துன்னலைக்கும் கரவெட்டிக்கும் இடையில் இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நடைபெற்றதாம்.

மேலும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் தீவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நெல்லியடிக்கும் மாலிசந்திக்கும் இடையில் உள்ள பல வீடுகள் குண்டுகள் வைத்துத் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேடுதல் சம்பவத்தின் போது ஜீப் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஜீப் இலங்கை வங்கிக்குச் சொந்தமானதாக இருக்கலாமென்று கூறப்படுகிறது.

இத்தேடுதல் முயற்சியில் பல நூற்றுக்கணக்கான படைவீரர்கள் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

சுமார் 4 மணியளவில் இப்பகுதியைவிட்டு ராணுவத்தினர் சென்றதாகவும் அப்போது ஏராளமான இளைஞர்களை விசாரணைக்காக கொண்டு சென்றதாகவும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

---

## மதுரை மாவட்டத்தில்
# இலங்கை அகதிகளுக்கு ஆயிரம் வீடுகள்!

(சென்னை)

இந்தியா வந்தடைந்துள்ள இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு மதுரைமாவட்டத்தில் ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

பெரியகுளம், திருவாதவூர் ஆகிய பிரதேசங்களில் இரண்டு முகாம்களாக இந்தவீடுகள் அமைக்கப்படும். ஒவ்வொன்றும் ஐநூறு வீடுகளைக் கொண்டதாக இவைஅமையும். இந்த வீட்டுத்திட்டத்திற்கென எண்பது லட்சம் ரூபா செலவிடப்படும் என்றும், ஏனையவசதிகளும் செய்துகொடுக்கப்படும் என்றும் மதுரைமாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். (ரா)

---

# பாகிஸ்தான் கோஷ்டியிடம் மே. இந்தியா தோல்வி!
## இறுதிப் போட்டி ஞாயிறன்று

(மெல்பான்)

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் 'உலக வெற்றிக் கிண்ணக்' கிரிக்கெட் போட்டியின் அரை இறுதிப் போட்டியில் மே இந்தியக் கோஷ்டி தோல்வியடைந்து விட்டது!

நேற்று நடந்த அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி, மே. இந்தியக் கோஷ்டியை 7 விக்கெட்டுகளால் தோல்வியடையச் செய்து விட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மே. இந்தியக் கோஷ்டி 44 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் கோஷ்டி 46 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 160 ஓட்டங்களைப் பெற்றது.

'உலக வெற்றிக் கிண்ணச்' சாம்பியன் மோதலில் இந்தியக் கோஷ்டியும், பாகிஸ்தான் கோஷ்டியும் எதிர்வரும் 10-ம் திகதி மோதிக் கொள்ளும்.

மேற்படிச் சுற்றுப் போட்டியில், 'ஏ' பிரிவில் முதல் ஆட்டத்தில், இந்தியாக் கோஷ்டி பாகிஸ்தான் கோஷ்டியை முதலில் தோற்கடித்தது தெரிந்ததே. (வி)

---

### உடைக்கப்பட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக பிரிகேடியர் தெரிவித்ததாக, யாழ் பிரஜைகள் குழுவினர் கூறினுர்கள்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. பஞ்சலிங்கத்தின் ஏற்பாட்டின்படி இச்சந்திப்பு நடந்ததாகவும் பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

யாழ். பிரஜைகள் குழுவினர் யாழ். மாவட்ட அமைச்சு இணைப்பு அதிகாரி திரு. எஸ். பி. பாலசிங்கம், யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர், ஆகியோர் பிரிகேடியர் வணதுங்காவைச் சந்தித்து குருநகர் மக்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினுர்கள்.

குருநகரிலுள்ள வீடுகளில் முதல்கட்டமாக 29 வீடுகளை உடைக்க முடிவுசெய்து, அவ் வீடுகள் உடைக்கப்பட்டுவருவதாகவும், இந்த வீட்டிலுள்ள குடும்பங்களுக்கு, பண்ணையில் வீடுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும், பிரிகேடியர் தெரிவித்ததாகவும், அப்போது, அந்த இடங்களில் குடியிருப்பதற்கான வசதிகள் இல்லை என்றும், யாழ். பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனராம்.

தகுந்த வசதிகள் செய்யப்படும்வரை வீடுகளிலிருந்து வெளியேற்றவேண்டாம் என்றும் பிரஜைகள் குழுவினர் கேட்டனர்.

---

### குருநகர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

களாகத் தங்கியுள்ளனர்.

குருநகர் இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள 86 வீடுகளில் வசிக்கும் 150 கும்பங்களைச் சேர்ந்த 780 பேரை வெளியேறுமாறு கடந்தமாதம் அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ். பிரைஜைகள் குழுவிற்கு இவர்கள் புகார் செய்ததைத் தொடர்ந்து இவர்களுக்கு நாவற்குழி வீடமைப்பு திட்டத்தில் வீடு வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதுபற்றி மேலிடத்திலிருந்து எவ்விதபதிலும் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. [க]

---

## புதிய பாணியில் நிதி திரட்டல்!

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில், புதிய பாணியில் நிதிதிரட்டும் வேலையில் இளைஞர்குழு ஒன்று ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது

பெற்ரேர் அகதிமுகாமில் பெற்ரேர் ஆஸ்பத்திரியில் என்று கூறி இக்குழுவினர் போலிக்காரணங்களைத் தெரிவித்து நிதிதிரட்டிவருகின்றனராம்.

---

## தபால் விநியோகம் தடைப்படலாம்

(யாழ்ப்பாணம்)

தபால் கந்தோர் வாகனங்கள் இனந்தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதால், தபால் விநியோகம் தடைப்படும்நிலைமை ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

யாழ் நகரத்தில், இக் கொள்ளையினுல், பல்வேறு இடங்களிலுள்ள தபால் பெட்டிகளிலிருந்து கடிதங்களை எடுத்துவரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. (க)

---

### தொண்டமான்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு அரசியல் விவகாரங்கள் குறித்தும் பேசும்படி சேட்டுக் கொள்ளப்படவில்லை என்றும் அரசாங்க பேச்சாளரான திரு. ஆனந்ததிஸ்ஸடி அல்விஸ் தெரிவித்தார். (ரா)

---

### பருத்தித்துறை:..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மக்களின் நடமாட்டங்களோ மேற்குறிப்பிட்ட பகுகளில் காணப்படவில்லை.

---

### துர்க்கை அம்மன்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாகத் தெரிகிறது.

கொள்ளை அடித்தவர்கள் குடாநாட்டைவிட்டு வெளியேருதவண்ணம் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

கொள்ளையடித்தவர்கள் மனம்மாறி தேவியின் சந்நிதியில் கொளளையடித்த நகைகளை ஒப்படைத்து அம்பாளின் அருளைப்பெற வேண்டுமென்றும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (மா)